Supplement to Dinakaran issue 11-6-2011 Registrar of news papers for India. Regn No.30424/77
Postal Regn No. TN/CH/(C)/277/2009-2011 Licenced to post without prepayment of posting under licence No.wpp 277/2009-2011

# சிங்காரவேலவர்



ட்வெண்ட்டி 20

- முருகனின் வாகனம் மயில். மயிலுக்கு சிகி என்றொரு பெயரும் உண்டு. சிகிவாகனன் என்பதிலிருந்து இத்தலம் சிக்கல் என்றானது.
- ஒரு பஞ்ச காலத்தில், உண்ண உணவில்லாத நிலையில், மாமிசத்தைத் தின்றதால் தேவலோகப் பசுவான காமதேனு, ஈசன் சாபத்தால் புலி முகம் பெற்றது. அந்த சாபத்தை காமதேனு நிவர்த்தி செய்து கொண்ட தலம், சிக்கல்.
- காமதேனு ஈசனை வழிபடுவதற்காக, தன் பாலால் ஒரு குளத்தை உண்டாக்கியது. அத் திருக்குளம் காமதேனு தீர்த்தம், தேனு தீர்த்தம், க்ஷீர புஷ்கரணி என்ற பெயர்களில் இன்றும் பிரதான தல தீர்த்தமாக விளங்குகிறது.
- அந்த பால் குளத்திலிருந்து வசிஷ்டர் வெண்ணெய் எடுத்து சிவலிங்கத்தை உருவாக்கி பூஜித்தார். பின் அதனை அவர் அகற்ற முற்பட்டபோது, லிங்கம் பூமியில் சிக்கிக் கொண்டதாலும் இத்தலம் சிக்கல் என வழங்கப்பட்டது.
- வெண்ணெயால் உருவாக்கப்பட்டதால் இத்தல ஈசன், நவநீதேஸ்வரர் என வடமொழியிலும், வெண்ணெய்நாதர் என தமிழிலும் போற்றி வணங்கப்படுகிறார்.
- வசிஷ்டர் வழிபட்டதால் வசிஷ்டாஸ்ரமம் என்றும் மல்லிகை வனங்கள் நிறைந்திருந்ததால் மல்லிகாரண்யம் என்றும் சிக்கல் அழைக்கப்படுகிறது.
- சூர சம்ஹாரத்துக்குப் புறப்படுமுன், இத்தலத்தில் அருளும் வேல்நெடுங்கண்ணி எனும் சத்தியதாட்சியிடம் முருகன் வேல் வாங்கி புறப்பட்டதாக வரலாறு.
- இன்றும் சூரசம்ஹார நிகழ்ச்சி முடிந்தவுடன் சிங்கார வேலவனின் திருமுகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பி, துடைக்கத் துடைக்க பெருகும் அற்புதம் நிகழ்கிறது.
- இத்தல சிங்கார வேலவனின் ஆபரணங்களும் அவன் பெயரைப் போலவே சிங்காரமானவைதான். ரத்னங்கள் இழைத்த கொண்டை, பொன்னாலான கவசம், வெள்ளியினாலான குடை, வைரவேல், ஆலவட்டம் என அற்புத வேலைப்பாடுகள் அமைந்த ஆபரணங்கள் இந்த வேலவனுக்கு உண்டு.
- தட்சிணாமூர்த்தி கோஷ்டத்திற்கருகே தலவிருட்சமான மல்லிகைக் கொடி உள்ளது.
- இத்தல கார்த்திகை மண்டபத்தில் கந்தபுராண நிகழ்ச்சிகளை ஓவியங்களாகவும், ராமாயண நிகழ்ச்சிகளை சுதைச்சிற்பங்களாகவும் தரிசிக்கலாம்.
- ஆணவமும் மந்த புத்தியும் உள்ளது ஆடு. நம்மிடம் உள்ள ஆணவத்தையும், மந்தபுத்தியையும் அடக்குவேன் என்பதை கூறாமல் கூறுவது போல இத்தல முருகன் ஆட்டுக்கிடா வாகனத்தில் பவனி வருகிறார்.
- இத்தலத்தில் விருத்த காவிரி எனும் ஓடம்போக்கியாறு, காமதேனு தீர்த்தம், கயாதீர்த்தம், லட்சுமி தீர்த்தம், அம்மா தீர்த்தம் என ஐந்து தல தீர்த்தங்கள் உள்ளன.
- திலோத்தமையின் மீது காதல் கொண்டு அதனால் தவ பலனை இழந்த விஸ்வாமித்திரர், இத்தலத்திற்கு வந்து அந்த பாவத்தை தீர்த்துக் கொண்டதாக தல புராணம் கூறுகிறது.
- வசிஷ்டர் சீடர்களோடு இருப்பதும், காமதேனு நவநீதேஸ்வரரை வழிபடுவதுமாகிய தலபுராணச் சிற்பங்களை பிராகாரத்தில் காணலாம்.
- வைகுந்தவாசனான நாராயணன், கோலவாமனப் பெருமாள் எனும் திருப்பெயரோடு அருள்கிறார்.
- மகாபலியை அழித்து அவன் அகங்காரத்தை சிதைக்க இத்தல ஈசனை வேண்டி தவமியற்றிய பெருமாள் இத்தலத்திலேயே கோமளவல்லித் தாயாருடன் நிலைகொண்டார்.
- வசந்த மண்டபத்தில் கார்த்திகை திருநாள் உற்சவத்தின் போது தேவியருடன் சிங்கார வேலவன் எழுந்தருள்வது வழக்கம். அப்போது நிலைக்கண்ணாடி முன் நடத்தப்படும் ஒய்யாளி சேவை அற்புதமானது.
- நாற்பது ஆண்டுகளாக தடைபட்டிருந்த தெப்போற்சவ திருவிழா இந்த வருடம் தைப்பூச திருவிழாவன்று மீண்டும் தொடங்கியுள்ளது.
- நாகப்பட்டினத்திலிருந்து 6 கி.மீ தொலைவில் இத்தலம் உள்ளது.

-ந.பரணிகுமார்

